**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சங்கர் | அசல் வழக்கு எண். | 65/2015 |
| த/பெ. | - | சுப்ரமணி | வா.சா. | 3 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

22.10.2025.

**1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எத்தனை ஏக்கர் பூமிக்கு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 ஏக்கர் 30 செண்ட். எத்தனை அயிட்ட சொத்தக்களாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஒரு அயிட்டம். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு பூமி உள்ளதா என்றால் இல்லை, வாதிகளின் பூமிக்கு நான் கூலி வேலைக்கு செல்வேன். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் உறவினர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் குடியிருக்கும் ஊரில் தான் நானும் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, மலையன் என்பவர் பெயரில் இருந்தது. வழக்கு சொத்துக்கள் மலையன் என்பவருக்கு தான் உரிமையானது என்றால் சரிதான். மலையன் என்பவருக்கு வழக்கு சொத்துக்கள் உரிமை என்பதால் அவர் மூன்றாம் நபர்களுக்கு கிரையம் எழுதி கொடுக்கவோ, உறவினர்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கவோ உரிமை உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மலையன் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான்கு ஆண் பிள்ளைகள் மற்றும் ஒரு பெண் பிள்ளை. அந்த பெண் பிள்ளை பெயர் ஆதிலட்சுமி என்றால் சரிதான். ஆதிலட்சுமிக்கு உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், என் அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும். உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுத்தால் ஆதிலட்சுமி என்பவர் அவரின் தகப்பனார் வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவார் என்றால் சரிதான். ஆதிலட்சுமிக்கும் மலையனுக்கும் எந்த வித விரோதமும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு சொத்தை மலையன் என்பவர் அவரது மகள் ஆதிலட்சுமிக்கு 1975 ஆம் ஆண்டில் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை ஆதிலட்சுமி என்பவர் அனுபவித்து வந்து எந்தவித ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் ஆதிலட்சுமி வழக்கு சொத்தை அனுபவித்தது கிடையாது. ஆதிலட்சுமியை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் அவர் இறந்த அன்று சென்று பார்த்தேன், அப்போது எனக்கு 10 வயது இருக்கும். ஆதிலட்சுமி இறந்த போது எனக்கு 10 வயது என்பதால் வழக்கு சொத்தை ஆதிலட்சுமி அனுபவித்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சலேந்திரன், சுசிலா, கன்னியம்மாள் மற்றும் தவமணி ஆகியோர்கள் ஆதிலட்சுமி என்பவரின் வாரிசுகள் என்றால் எனக்கு சுசிலா மற்றும் சலேந்திரன் என்பவர்களை தான் தெரியும். ஆதிலட்சுமி இறந்த பின்பு சலேந்திரன் என்பவர் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள். வழக்கு சொத்தில் கம்பு, காராமணி ஆகியவற்றை பயிர் செய்து சலேந்திரன் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 3 ம் வாதியின் சகலையின் மகளை தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 ம் வாதி எனக்கு உறவுமுறை என்றால் இல்லை. 3 ம் வாதி எனக்கு உறவுமுறை என்பதால் தான் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எந்த காலத்திலும் விவசாயம் செய்ததில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் எந்த ஆண்டு பாக பிரிவினை செய்து கொண்டனர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து பற்றிய விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வழக்கு சொத்தை 1 ம் பிரதிவாதி சலேந்திரன் என்பவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2025.10.22 16:12:11 +0530

District Munsif
Vanur.